[1978 செப்டம்பர் 11

(ஈ) வெள்ளத்தால் பாதிக்கப்பெற்றுள்ள வட மாநிலங்களுக்கு உதவுவது குறித்து

திரு. ரா. கிருஷ்ணன்: தலைவரவர்களே, இன்றைக்கு வட மாநிலங்களில் குறிப்பாக டில்லி, பீகார், மேற்கு வங்காளம் போன்ற மாநிலங்களில் கடுமையான வெள்ளச் சேதம் ஏற்பட்டு, கோடிக்கணக்கான ரூபாய் நஷ்டம் ஏற்பட்டிருக்கிறது. மனிதாபிமான அடிப்படையில் தமிழகத்திலிருந்து நம்மால் இயன்ற உதவிகளை அவர்களுக்கு செய்ய வேண்டும் என்பது நம்முடைய கடமை. அந்த அடிப்படையில் இந்த அரசு ஏதாவது ஏற்பாடு செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் ஏதாவது சொல்ல விரும்புவதாக இருந்தால் சொல்லலாம்.

(பதில் இல்லை)

(உ) உரிமைப் பிரச்னை குறித்து.

திரு. எம். ஏ. லத்தீப்: தலைவரவர்களே, நான் ஒரு உரிமைப் பிரச்னை கொடுத்திருந்தேன்; அது மிகவும் முக்கியமானது. அதை தாங்கள் எடுத்துக்கொள்ள......

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. லத்தீப் அவர்கள் எழும்பும்போதே நினைத்தேன், என்ன கேட்கப் போகிறுர்கள் என்று. அது ஆய்வில் இருக்கிறது. இரு தரப்பினரையும் வைத்துப் பார்க்க வேண்டும். நிச்சயம் நாளை அல்லது மறுநாள் எடுத்துக் கொள்ளப்படும்.

(ஊ) மகாகவி பாரதியார் பிறந்தநாள் விழா குறித்து

திரு. எம். ஏ. லத்தீப்: தலைவரவர்களே, இன்றைக்கு மகாகவி பாரதியார் பிறந்த நாள் விழா நாடெங்கும் கொண்டாடப்படுகிறது. இன்றைக்கு நம்முடைய சட்டமன்றம் இங்கே நடைபெற்றுக்கொண்டிருப்பதால் பாரதியாரை இங்கே நினைவு படுத்துவது மிகவும் பொருத்தமாக இருக்கும் என்று கருதுகிறேன். நாடெங்கும் பாரதி விழா கொண்டாடும்போது நாமும் அவருக்கு இங்கே மரியாதை செலுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் காலையிலேயே இங்கே வந்திருந்து, 9 மணிக்கு இந்தப் பிரச்னையை எழுப்பியிருந்தால் நல்லது. இருந்தாலும் தாங்களே சொல்லி முடித்துவிட்டீர்கள். அது எல்லோரும் ஏற்றுக்கொள்ளக் கூடிய ஒன்று. அதை ஏற்று, பாரதியாருக்கு தகுந்த வணக்கத்தையும் மரியாதையையும் தெரிவித்துக்கொள்கிறேம்.